The Hon. Sri P. KAKKAN: முன்பொரு தடவை சபையில் இந்தக் கேள்வி கேட்கப்பட்டது. அப்போது, ஸ்ரீ ஜி. டி. நாயுடு அப்படிப்பட்ட ரேடியோவைத் தயாரிப்பது எனக்குத் தெரியாது என்று பதில் சொன்னேன்.. அந்த ரேடியோக்களை வாங்கினால் அரசாங்கத்திற்கு செலவு குறையக் கூடுமானால் இந்த யோசனையைப் பரிசீலனை செய்கிறோம்.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR: முன்பொருதரம் இந்த ரேடியோ ஸெட்டுகள் சம்பந்தமான ஒரு கேள்விக்கு கனம் அமைச்சர் பதில் சொன்னபோது, அதிக விலை மதிப்புள்ள பல ரேடியோ ஸெட்டுகள் சரிவர வேலை செய்யவில்லை என்று சொன்னார். ஆகவே அம்மாதிரி ஸெட்டுக்களை எடுத்துவிட்டு அவைகளுக்கு பதிலாக ஓபன் மார்க்கெட்டில் விற்கும் ரேடியோக்களை வாங்கி வைப்பதற்கு சர்க்கார் முன் வருமா ?

The Hon. Sri P. KAKKAN: இதைப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம்.

Kundah Project

* 459 *Q*.—**Sri M. KALYANASUNDARAM**: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the total extent of lands acquired from private landowners in connection with the Kundah Project;

(*b*) whether compensation has been given to all of them; and

(*c*) if not, the reasons for the delay?

The Hon. Sri V. RAMIAH: (*a*) 39·77 acres of land have so far been acquired from private land owners.

(*b*) & (*c*) Compensation has been paid to the owners in respect of 14·49 acres. In respect of the remaining 25·28 acres the awardees have not accepted the compensation fixed but claimed either enhanced compensation or lands in exchange. This will entail a reference to the court by the Land Acquisition Officer under section 31 (2) of the Land Acquisition Act.

Sri V. K. KOTHANDARAMAN: நீலகிரி ஜில்லாவில் முள்ளிக்கரை கிராமத்தில் எமரால்ட் எஸ்டேட் சொந்தக்காரராக இருக்கும் ஏ. வி. தாமஸ் அண்டு கம்பெனியாரிடமிருந்து ஏக்கரா ஒன்று 200 ரூபாய் வீதம் 27 ஏக்கரா நிலத்தை சுமார் 17 லட்சம் ரூபாய்க்கு. . . . .

Mr. SPEAKER: நீங்கள் சொல்வது மூலக் கேள்விக்குச் சம்பந்தம் உடையதாக இருக்க வேண்டும்.

Sri V. K. KOTHANDARAMAN: 17 லட்சம் ரூபாய்க்கு 27 ஏக்கரா நிலத்தை வாங்கியதாக வந்த புகார் மீது சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

The Hon. Sri V. RAMIAH: இதைப்பற்றி இதற்குமுன் தனியாகக் கேள்வியொன்று வந்ததற்கு நான் பதில் சொல்லும் நேரத்தில், 'அம்மாதிரி எதும் இன்னும் பணம் கொடுக்கவில்லை' என்று சொல்லியிருக்கிறேன்.

Sri N. K. PALANISAMI: அது விஷயமாக சர்க்கார் கவனத்திற்கு வந்து, சர்க்கார் மேல் நடவடிக்கை எடுத்துக்கொண்டதன் பேரில் கலெக்டரை மாற்றியிருக்கிறார்கள். அது சம்பந்தமாக பாக்கி அதிகாரிகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

The Hon. Sri V. RAMIAH: That is a separate question which has nothing to do with the main question.